1981 ஏப்ரல் 7]

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அப்படி வானொலி நிலையங்களை அமைப்பதற்காக இடங்கள் வேண்டும் என்று கேட்கிற நேரத்தில், தமிழக அரசு, எந்தவிதமான தடையும் இன்றி உடனடியாக, அந்த இடங்களை வழங்குகிற முயற்சி களைத்தான் இதுவரை மேற்கொண்டிருக்கிறது. நாகர்கோவி லிலே இடம் வேண்டும் என்று இன்னும் மத்திய அரசிடமிருந்து தகவல் வரவில்லை. அப்படி வருமேயானால் உடனடியாகத் தக்க இடத்தைத் தருவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 677 முதல் 681 முடிய உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டு கோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

சித்தையன் கோட்டையில் அரசு மருத்துவமனை கட்டும் திட்டம்.

*வினா எண். 682—திரு. என். எஸ். வி. சித்தன், திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம் சித்தையன் கோட்டையில் அரசு மருத்துவமனை கட்டுவதற்கு இலவசமாக இடம் கொடுப்பதற்கு ஒருவர் முன்வந்துள்ளாரா ?

(ஆ) ஆம் எனில் அரசு மருத்துவமனை கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில் எவ்வளவு காலத்திற்குள் வேலை துவங்கப் படும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) மதுரை மாவட்ட மருத்துவ அலுவலர் அவர்கள் இதற்காக கருத்துருவை அனுப்பி வைக்குமாறு கோரப் பட்டுள்ளார்கள். அவரது கருத்துரு கிடைத்தவுடன் அரசு பரி சீலித்து முடிவெடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்தையன் கோட்டை பகுதி வளர்ந்து வருகிற ஒரு நகரம். அரசு மருத்துவமனை கட்டுவதற்கு இலவச மாக இடம் கொடுக்கிறேன் என்று யார் சொன்னார்கள் ? எப்பொழுது சொன்னார்கள் ? அமைச்சர் அவர்கள் கூறிய பரிசீலனை எப்போது முடிவடையும் ? கட்டிடம் கட்டுவதற்கான துவக்க வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் இடத்தையும், 13,000 ரூபாய் ரொக்கத்தையும் திருவாளர்கள் கே. என். காதிர் மீரான் ராவுத்தர், எம். என். நூர்முகமது ராவுத்தர் கொடுத்திருக்கிறார்கள். நான் மூலக் கேள்விக்கான விடையில் ஏற்கனவே குறிப்பிட்டிருப்பதைப் போல அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த இடத்திலே மருத்துவமனையை ஏற்படுத்தி நல்ல முறையில் செயலாற்றும் விதத்தில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு பெருமக்களும் அரசுக்கு எப்போது தங்களது விருப்பத்தைத் தெரிவித்திருந்தார்கள். எவ்வளவு காலம் அதனை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வதற்கு அரசு எடுத்துக் கொண்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30—9—1980 அன்று அவர்களின் விருப்பத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே இப்போது 6 மாதம் தான் ஆகிறது. அங்கே மருத்துவமனை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க விரைவில் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்தையன் கோட்டை என்னுடைய தொகுதியைச் சார்ந்தது ஆகும். இந்த இரண்டு பெருமக்களும் 2 ஆண்டுகளுக்கு முன்பே தங்களது விருப்பத்தை அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அங்கே உள்ள கோட்டாட்சித் தலைவர் கூட மக்களை சந்தித்து உடனடியாக அங்கே மருத்துவமனை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்து வந்தார்கள். இங்கேயும் 2, 3 முறை பேசியிருக்கிறேன். ஆகவே இந்தத் திட்டத்தை விரைவில் ஆய்ந்து, அந்தப் பக்கத்திலே மருத்துவ மனையை ஏற்படுத்த அரசு உடனடியாக முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே தந்திருக்கும் ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் சொன்னேன். அந்த உத்தரவைப் பற்றிய விவரங்களை வேண்டுமானாலும் படித்து விடுகிறேன். 13,000 ரூபாயையும் 5 ஏக்கர் நிலத்தையும் ஏற்றுக் கொண்டு, 30—9—1980 அன்று ஆணையிடப்பட்டது. ஆணை எண். ப. வ. 1634, நலம், தேதி 30—9—1980. ஆகவே அதை நாம் 30—9—1980 அன்றே ஏற்றுக் கொண்டிருக்கிறோம். விரைவில் அந்தப் பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.